தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**A041** இலக்கிய வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. மனித அறிவின் ஆற்றல் மிக்க வெளிப்பாடு எது?
2. இன்று பேச்சு வழக்கிலுள்ள உலக மொழிகளில் முதன்மையானது எது?
3. தொல்காப்பியத்தின் முப்பெரும் பிரிவுகள் யாவை?
4. உவமையின் தோற்றத்திற்கு நிலைக்களங்கள் எவை?
5. கணக்கு என்ற சொல்லின் பொருள் என்ன?
6. திருக்குறள் காமத்துப் பாலில் உள்ள இரு இயல்களின் பெயர்களை எழுதுக.
7. நடமாடும் கோயில் என்று திருமூலர் குறிப்பிடும் கருத்து எது?
8. அன்பையே விளக்காக்கியவர் யார்?
9. கந்தபுராணம் இயற்றியவர் யார்?
10. வாமன முனிவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?
11. வடமொழிச் சொற்கள் விரவிய தமிழ் நடையின் பெயர் என்ன?
12. ‘பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவான நூல் எது?
13. பதினாறாம் நூற்றாண்டின் அவ்வையார் இயற்றிய நூற்கள் யாவை?
14. சிறுகதையின் தந்தை என்று போற்றப்படுவர் யார்?
15. திருமாலை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சமயம் எது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. ஐந்திணை எழுபது – சிறு குறிப்பு வரைக.
2. மணிமேகலையின் அமைப்புக் குறித்து எழுதுக.
3. வீர சைவ இலக்கியம் – சிறு குறிப்பு எழுதுக.
4. சமய இலக்கியங்கள் தோன்றுவதற்கான காலச்சூழல் குறித்து எழுதுக.
5. தமிழின் முதல் சித்தாந்த நூலான சிவஞான போதம் பற்றி எழுதுக.
6. நம்பிகாளி – சிறு குறிப்பு எழுதுக.
7. திருவாதவூரடிகள் புராணம் குறித்து எழுதுக.
8. ஒட்டக்கூத்தரின் படைப்புகள் பற்றி எழுதுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்ச் சங்கங்கள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) பதினேழாம் நூற்றாண்டில் கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு பற்றி விவரிக்க.

2. (அ) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சைவ இலக்கியங்கள் குறித்து விரிவான அளவில் விடை எழுதுக.

(அல்லது)

(ஆ) சித்தர் பாடல்கள் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றனைத் தீட்டுக.

3. (அ) சிலப்பதிகாரத்தின் சிறப்புச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டின் இசைத் தமிழும் நாடகமும் குறித்து விளக்கி எழுதுக.

✶✶✶